# உங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதில் பிரச்சினைகள் உள்ளவர்களா?



Dr.எஸ்.தேவானந்தன்
M.D.(Col),P.G.Dip.H.D.
Consultant Pediatric Psychologist,
Director & CEO,
OSILMO Special Education and
Research Centre

சென்ற இதழ் தொடர்ச்சி...

எ) சில பிள்ளைகள் அவதான குறைவாக இருப்பார்கள். (Attention Disoder)

1. தொடர்ந்து ஒரு அவதானத்துடன் படிக்க முடியாமை.

2. இப்பிள்ளைகளால் அறிவுரைகளிற்கு இணங்க வேலை செய்ய முடியாது.

3. ஒழுங்காக இருக்க முடியாமை. அதாவது இவர்கள் படிக்கும் மேசையைக்கூட ஒழுங்காக வைத்திருக்க மாட்டார்கள்.

4. இப்பிள்ளைகளால் ஒன்றை ஆரம்பித்து அதை முடிக்கும் வரை இருக்க முடியாது.

5. இவர்களால் ஏதாவது ஒன்றை நினைத்து அதற்கு இணங்க வேலை செய்ய முடியாது.

6. பாடசாலைக்கு கொண்டு செல்லும் பொருட்களை தொலைத்து விடுவார்கள். eg: பென்சில், இரேசர் மேலும் பல...

7. சுற்றுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களிற்கு திடீர் திடீர் என அவதானங்கள் செல்லுதல்.

8. சில பிள்ளைகள் இன்று செய்யும் வேலைகளை இன்றே மறந்து போவார்கள்.

9. விளங்கப்படுத்துவதை கிரகித்து சுருக்கமாக இவர்களால் எழுத முடியாது.

10. ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரி படிக்க மாட்டார்கள். ஒரு நாள் நன்றாக இருப்பார்கள், படிப்பார்கள். மறுநாள் மிகவும் மோசமாக நடந்து கொள்வார்கள்.

11. இப்பிள்ளைகளிடம் கெட்டித்தனம் இருந்தும் அதை தேவையான இடத்தில் பாவிக்க முடியாமை.





மேற்குறிப்பிட்ட விடயங்களையும் சென்ற இதழில் குறிப்பிட்ட விடயங்களையும் முதலில் நன்றாக புரிந்து கொள்ளுங்கள். எமது பிள்ளைகளிற்கு எங்கு பிரச்சினைகள் உண்டு என்பதை அவசரப்படாது அறிந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள் மேற்குறிப்பிட்ட எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். தற்செயலாக உங்கள் பிள்ளை இவ்வாறு ஒரு பிரச்சினைக் குரிய இடத்தில் இருப்பின் எடுத்த எடுப்பிலேயே எனது பிள்ளைக்கு ஏதோ ஒரு பிரச்சினை உள்ளது என்பதில்லை. பொறுமையாக உங்கள் பிள்ளைகளை அவதானியுங்கள். சிலவேளைகளில் ஏதாவது ஒரு சிறிய காரணம் இருக்கலாம். அவரால் சரியாக அவரது வேலைகளை மட்டுமன்றி பாடங்களை அவதானிக்க முடியாமைக்கு தொடர்ந்து உங்கள் பிள்ளைகளுடன் நேரத்தை ஒதுக்கி அவதானியுங்கள். இவ்விடத்தில் நான் முக்கியமாக குறிப்பிட வேண்டியது 'பொறுமை' மிக முக்கியம். உங்கள் பிள்ளைகளுடன் பொழுதை சாந்தமாக களியுங்கள். அவசரம், ஆத்திரப்பட்டு பிள்ளைகளை தாக்காதீர்கள், ஒதுக்காதீர்கள். உங்கள் பிள்ளைகளின் பிரச்சினைக்குரிய காரணத்தை கண்டறிய முற்படுங்கள்.

**Child is not a Problem**
**Child has a Problem**
பிள்ளை இங்கு பிரச்சினை இல்லை
பிள்ளைக்கு பிரச்சினை இருக்கிறது

இந்த வாக்கியத்தை புரிந்து கொள்ளுங்கள்.

சில வேளைகளில் உங்கள் பிள்ளைகளின் கண்களில் ஏதாவது ஒரு சிறிய பிரச்சினைகள் காணப்படலாம். இதன் காரணமாக பிள்ளையால் சரியாக பாடங்களை கவனிக்க முடியாது போகலாம். இதைப் பிள்ளையுடன் பொறுமையாக கதைத்து தகுந்த வைத்தியரை நாடி கண்டறிய முயலுங்கள். அதுமட்டுமன்றி சிலவேளைகளில் உங்கள் பிள்ளைகளின் காதுக்குள் அழுக்கு சென்று அடைபட்டிருக்கலாம். இவ்வாறு சிறிய சிறிய பிரச்சினைகள் கூட உங்கள் பிள்ளைகளின் படிப்பில் ஆதிக்கம் செலுத்தலாம்.

சில பிள்ளைகள் சிறு பிராயத்தில் வெளியில் உள்ள பொருட்களை மூக்குள் வைப்பது உண்டு. இது மூக்கில் ஒட்டப்பட்டு பிள்ளை வளர்ந்து வரும் போது துர்நாற்றம், சளி போன்றன மூக்கில் இருந்து வருவதன் காரணமாக பாடசாலையிலும் வீட்டிலும் இப்பிள்ளை ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக இப்பிள்ளை நாளடைவில் பெரும் பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்க நேரிடும். அது மட்டுமன்றி சில குடும்ப சூழ்நிலை கூட பிள்ளைகளின் படிப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக சில வீடுகளில் தந்தை மது அருந்தும் பழக்கம் உடையவராயின் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றார்கள். சில குடும்பங்களில் தந்தை, தாய் இருவரும் வேலைக்கு செல்பவர்களாக இருப்பர். சிறிய பிள்ளைகளை பெரிய பிள்ளைகள் கவனிக்க வேண்டிய கட்டாயத்திற்கு இப்பிள்ளைகள் தள்ளப்படுகிறார்கள். இங்கு பல பிரச்சினைகள் உருவாக இடமுண்டு. அத்துடன் இவ்வாறு இருக்கும் போது அப்பிள்ளைகளின். படிப்பு பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு பல பல காரணங்கள் ஒரு பிள்ளையின் கற்றல் நடவடிக்கைகளில் இடையூறாக இருக்கலாம். இங்கு பிள்ளைகளில் பிழைகள் மிகக் குறைவு. பெற்றோர் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு பிள்ளையை பெற்றால் மட்டும் போதாது. அப்

பிள்ளை வளரும் போது அதன் மனம் பாதிக்காதவாறு பெற்றோர் நடந்து கொள்ள வேண்டும். பல குடும்பங்களில் அவர்களது சுற்றுச் சூழ்நிலை காரணமாக பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

அது மட்டுமன்றி பிள்ளைகளின் கல்வி மற்றும் நற்பழக்கங்களின் வளர்ச்சியில் ஆசிரியர்



கள் மிக முக்கிய பங்கு வகிக்கிறார்கள். சில வகுப்பறைகளில் ஆசிரியர்கள் சத்தமாக கதைப்பதில்லை. பிள்ளைகளிற்கு விளங்கக் கூடிய விதத்தில் உச்சரிப்புகளை மேற்கொள்வதில்லை. மற்றும் சில ஆசிரியர்கள் கரும்பலகையில் எழுதியவற்றை உடனடியாக அழிப்பது. இவை எல்லாம் சில பிள்ளைகளின் கற்றலை மிகவும் பாதிப்புறச் செய்யும் காரணிகளாகும். ஏன் இவற்றை குறிப்பிடுகின்றேன் என்றால் ஒரு வகுப்பறையை எடுத்துக் கொண்டால் எல்லா பிள்ளைகளும் ஒரே வேகத்தில் படிக்கக் கூடியவர்கள் இல்லை. சில பிள்ளைகள் மிகவும் புத்திசாலிகள். ஆனால் சிறிது மெதுவாகவே வேலைகளை செய்வார்கள். இவ்வாறு இருக்கும் போது நன்றாக வேகமாக எழுதக் கூடிய பிள்ளைகள் உடனடியாக எல்லாவற்றையும் எழுதி விட்டு ஆசிரியர்கள் கேட்கும் போது சரி எழுதி முடிந்தது என்பார்கள். இங்கு ஆசிரியர்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் மெதுவாக எழுதும் பிள்ளைகள் வீட்டிற்கு சென்றவுடன் பெற்றோர் ஏன் கொப்பியில் எழுதவில்லை என்று பிள்ளைகளை கேட்டு உள, உடல் ரீதியாக தாக்கப்படுகின்றார்கள். இங்கு பெற்றோரும் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறான Slow Learners ஆன பிள்ளைகளிற்கு தனியாக இப்பிள்ளைகளை வைத்து அவர்களிற்கு பயிற்சிகளை கொடுத்து இப்பிள்ளைகளையும் நாளடைவில் சாதாரண பிள்ளைகளுடன் படிக்கக் கூடிய வகையில் மாற்ற முடியும்.

மேற்குறிப்பிட்டது போன்று பல காரணிகள் ஒரு பிள்ளையின் படிப்பில் மட்டுமன்றி அப்பிள்ளையின் வளர்ச்சிப் படிநிலையிலும் தாக்கங்களை ஏற்படுத்தலாம். எனவே ஒவ்வொருவரும் நன்றாக உங்கள் பிள்ளைகளை புரிந்து கொள்ளுங்கள். பொறுமையாக உங்கள் பிள்ளைகளின் பிரச்சினைகளை கையாளுங்கள். சிலவேளைகளில் உங்கள் பிள்ளைகளிற்கு உண்மையிலேயே Dyslexia, Dyscalculia, Dysgraphia, A.D.H.D. & Autism போன்ற பலதரப்பட்ட குறைபாடுகள் காணப்படலாம். இதன் காரணமாக உங்கள் பிள்ளைகளால் சரியாக பாடங்களை மட்டுமன்றி பழக்க வழக்கங்களிலும் மாறுபட்ட செயற்பாடுகள் காணப்படலாம். எனவே, உங்களால் உங்கள் பிள்ளைகளின் பிரச்சினைகளை கண்டறிய முடியாதவிடத்து தகுந்த வைத்தியரை நாடி ஆலோசனை பெறுதல் நன்று.

(தொடரும்...)